**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சின்னசேலம் ஊராட்சி ஒன்றியம்,**

**கள்ளக்குறிச்சி மாவட்டம்**

**பதிவுறு எழுத்தர் பதவிக்கான விவர அறிவிக்கை**

ந.க.எண்.அ1/3312/2023 நாள். 08.12.2023

கள்ளக்குறிச்சி மாவட்டம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு, சின்னசேலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், காலியாக உள்ள பதிவுறு எழுத்தர் பணியிடத்தை நிரப்பும் பொருட்டு தகுதியான நபர்களிடமிருந்து 11.12.2023 முதல் 21.12.2023 பிற்பகல் 5.45 மணி வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1 | பதவியின் பெயர் | – | பதிவுறு எழுத்தர் |
| 2 | ஊதியம் | – | ரூ.15900 – 58500 என்ற ஊதிய ஏற்ற முறையில் அரசு நிர்ணயம் செய்யும் படிகளுடன். |
| 3 | வயது | – | 18 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும் |
| 4 | 01.07.2023 அன்று 18 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும், மேற்கண்ட தேதியில் அதிகபட்ச வயது வரம்பு பூர்த்தியடைந்தவராக இருக்கக் கூடாது. | | |

| இனம் | SC(A) | SC | ST | MBC & DNC | BC | OC |
|---|---|---|---|---|---|---|
| | ஆதிதிராவிடர் (அருந்ததியர்) | ஆதிதிராவிடர் | பழங்குடியினர் | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் | பிற்படுத்தப்பட்டோர் | பொதுப்பிரிவினர் |
| வயது வரம்பு | 37 | 37 | 37 | 34 | 34 | 32 |

As Per G.O.No.91, Dated:13.09.2021 Age Relaxation for two years.

| | | | |
|---|---|---|---|
| 5 | மொத்தப் பணியிடங்கள் | – | 1 |
| 6 | இடஒதுக்கீடு விபரங்கள் | – | GT (பொதுப்பிரிவினர்): 1<br>(முன்னுரிமை பெற்றவர்)<br>கொரோனா தொற்றிலோ, இதர காரணங்களாலோ பெற்றோர் இருவரையும் இழந்த இளைஞர்கள் (மகன்/மகள்)<br>(அரசாணை (நிலை) எண்.122, நாள்.01.11.2021 – மனித வள மேலாண்மைத் (கே.2) துறை உட்பட்டது) |
| 7 | கல்வித் தகுதி மற்றும் பிற தகுதிகள் | – | பத்தாம் வகுப்பு நிறைவு செய்திருக்க வேண்டும். |
| 8 | கடைசி நாள் | – | 11.12.2023 முதல் 21.12.2023 – பிற்பகல் 5.45 மணி வரை விண்ணப்பங்கள் பெறப்படும். விண்ணப்பங்களை www.kallakurichi.nic.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். |

நிபந்தனைகள்:

1. விண்ணப்பதாரர்கள் கல்வித்தகுதி, சாதிச்சான்று, முன்னுரிமை சான்று ஆகியவைகளுக்கு ஆதாரம் கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.
2. இனசுழற்சி, வயது மற்றும் கல்வித் தகுதியுள்ள நபர்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்கப்படும்.
3. விண்ணப்ப படிவத்தில் உள்ள விபரங்களை முழுமையாக பூர்த்தி செய்து அனுப்பப்பட வேண்டும். முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.
4. சுயமுகவரியுடன் கூடிய அஞ்சல் வில்லை ரூ.30/– ஒட்டப்பட்ட அஞ்சல் உறை–1 (10x4 Inches Postal Cover) இணைத்து அனுப்பப்பட வேண்டும்.
5. தகுதியில்லாத மற்றும் காலங்கடந்து பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
6. எந்த ஒரு விண்ணப்பத்தையும் நிராகரிக்கும் அதிகாரம் நிர்வாகத்திற்கு உண்டு.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரிய சான்றுகளின் நகல்களுடன் சின்னசேலம் ஊராட்சி ஒன்றிய அலுவலக வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை நேரிலோ அல்லது ஆணையாளர், சின்னசேலம் ஊராட்சி ஒன்றியம் – 606201 என்ற முகவரிக்கு பதிவஞ்சல் மூலமாகவோ 11.12.2023 முதல் 21.12.2023 அன்று பிற்பகல் 5.45 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும்.

பதிவுறு எழுத்தர் காலிப்பணியிடங்களுக்கான விவரங்கள் மற்றும் விண்ணப்ப படிவம் சின்னசேலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலும் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கான www.kallakurichi.nic.in என்ற இணையதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

8.12.23
ஆணையாளர்,
ஊராட்சி ஒன்றியம்,
சின்னசேலம்.

8/12/2023